**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.261/2023.
Prosecution witness for P.W. 13.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஞானமுத்து. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது தூத்துக்குடி மத்திய காவல்நிலையத்தில் போக்குவரத்து பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தென்பாகம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது 20.01.2023 அன்று மாலை 6 மணியளவில் நிலையத்தில் இருந்தபோது நிலைய குற்ற எண் 55/2023 இதச 294(பி), 302, 506(2) பிரிவுகள் படியான வழக்கில் முதல் தகவல் அறிக்கையை துரித தபாலாக பெற்று தூத்துக்குடி 1வது குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் இரவு 9 மணியளவில் ஒப்படைத்து ஒப்புகை பெற்று நிலையம் திரும்பினேன். அதற்காக எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு **அ.சா.ஆ 13**. பின்னர் 21.01.2023 அன்று காலை 10.30 மணியளவில் நான் நிலையத்தில் இருக்கும்போது ஆய்வாளர் கொலையுண்டு இறந்துபோன மகாராஜன் என்பவரின் பிரேதத்தின்மீது பிரேத விசாரணையை பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்து என்னிடம் அதற்கான அறிக்கையை கடவுச் சீட்டுடன் கொடுத்தனுப்பியதை நான் மேற்படி நீதித்துறை நடுவரிடம் காலை சுமார் 11.30 மணியளவில் ஒப்படைத்து ஒப்புகை பெற்று

நிலையம் திரும்பினேன். அதற்கான கடவுச்சீட்டு **அ.சா.ஆ 14**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும், சொன்ன தேதியிலும் மேற்படி நீதித்துறை நடுவரிடம் எந்த ஆவணத்தையும் ஒப்படைக்கவில்லை என்றும், ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தென்பாகம் காவல்நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு 5 நிமிடத்தில் வரலாம் என்றால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2026.06.10 19:24:40 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.